www.PapaCambridge.com

Cambridge International A Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Level

**TAMIL** **9689/04**

Paper 4 Texts **October/November 2014**

**2 hours 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*4411289512*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, glue or correction fluid.
DO **NOT** WRITE IN ANY BARCODES.

Answer any **three** questions, each on a different text. You must choose **one** from Section 1, **one** from Section 2 and **one other**.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.
You should write between 500 and 600 words for each answer.
You are advised to divide your time equally between your answers.

The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.
At the end of the examination, fasten all your work securely together.

**முதலில் கீழே உள்ளதைப் படிக்கவும்**

விடைகள் எழுதுவதற்காக தாள்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அதிலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும்.
நீங்கள் கொடுக்கும் எல்லா விடைத் தாள்களிலும் உங்கள் பெயர், உங்கள் எண், தேர்வு நிலைய எண் ஆகியவற்றை எழுதவும்.
கருப்பு அல்லது கரு நீல பேனா மையினால் விடைகளை எழுதவும். பசை, பிழை திருத்தும் திரவம், ஸ்டேப்பிள் பின்கள், ஹைலைட்டர்கள், பேப்பர் க்ளிப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தாதீர்கள்.
**பார்கோட் மீது எதையும் எழுதாதீர்கள்.**

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். பகுதி ஒன்றிலிருந்தும் பகுதி இரண்டிலிருந்தும் ஒவ்வொரு கேள்விக்கு கட்டாயமாக விடை தரவேண்டும். மற்றொரு கேள்வியை எந்தப் பகுதியிலிருந்தும் எடுக்கலாம்.
உங்களுடைய விடைகளை தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் **கொண்டுபோகக்கூடாது**.
பாடப் புத்தகங்களைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் கொண்டுபோகக்கூடாது.
ஒவ்வொரு கேள்விக்கும் 500 முதல் 600 சொற்களில் விடை எழுதவேண்டும்.
தேர்வு எழுதவிருக்கும் நேரத்தை எல்லா விடைகளையும் எழுத சமமாகப் பங்கிட்டுக் கொள்வது நல்லது.

ஒவ்வொரு கேள்விக்கும் உரிய மதிப்பெண்கள் அடைப்புக் குறிக்குள் [ ] தரப்பட்டுள்ளது.
தேர்வு எழுதி முடித்தவுடன் விடைத் தாள்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிக்கொடுக்கவும்.

This document consists of **4** printed pages.

DC (LK/JF) 82555/2
© UCLES 2014

CAMBRIDGE International Examinations

[Turn over

www.PapaCambridge.com

## பகுதி – 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.

**1** ஏதாவது ஒரு வினாவிற்கு ((அ) அல்லது (ஆ)) விடை தரவும்.

(அ) நற்றிணை

கழுநீர் மேய்ந்த கருந்தாள் எருமை
பழனத் தாமரைப் பனிமலர் முனைஇ,
தண்டுசேர் மள்ளரின் இயலி, அயலது
குன்றுசேர் வெண்மணல் துஞ்சும் ஊர!
வெய்யை போல முயங்குதி: முனை எழத்
தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன்
மலி புனல் வாயில் இருப்பை அன்ன, என்
ஒலி பல் கூந்தல் நலம் பெறப் புனைந்த
முகை அவிழ் கோதை வாட்டிய
பகைவன் மன்? யான் மறந்து அமைகலனே! (பரணர்)

**(i)** பரத்தையிற் பிரிந்து வந்த தலவனிடம் தலைவி கூறியது யாது?

**(ii)** இந்தப் பாடல் மருதத்துறையில் எவ்வாறு பொருந்தும்? ‘மலி புனல் வாயில் இருப்பை அன்ன’ என்பதன் பொருள் என்ன? [25]

(ஆ) புறநானூறு

நெடுங்கிள்ளியை கோவூர் கிழார் ஏன்,எப்படி இடித்துரைத்தார்? [25]

© UCLES 2014

www.PapaCambridge.com

2 ஏதாவது ஒரு வினாவிற்கு ((அ) அல்லது (ஆ)) விடை தரவும்.

திருக்குறள்

(அ)

விருந்துப் புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று
அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்

(i) சாவா மருந்து, செய்யாள் என்ற சொற்களின் பொருள் என்ன?

(ii) விருந்தோம்பலின் சிறப்புகளை மேற்கூறிய இரண்டு குறள்களிலும் ஏனைய குறள்களிலும் வள்ளுவர் எப்படிப் போற்றுகிறார்? [25]

(ஆ) வெகுளாமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக. [25]

3 ஏதாவது ஒரு வினாவிற்கு ((அ) அல்லது (ஆ)) விடை தரவும்.

தேவாரம் – அப்பர்

(அ)

உறவாவார் உருத்திரபல் கணத்தினோர்கள்
உடுப்பனகோ வணத்தோடுதீ ளுளவாமன்றே
செறுவாரும் செறமாட்டார் தீமை தானும்
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார் பொன் னிதழிநறுந்தாரோன் சீரார்
நமச்சிவாயச் சொல்லவல்லோம் நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர் நயனச் சோதியையே தொடர்வுற்றோமே

(i) இந்தப் பாடலில் ‘சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட’ என்பதன் பொருள் என்ன?

(ii) இந்தப் பாடலைக் கொண்ட மறுமாற்றத் திருத்தாண்டகத்தில் சிவ பெருமானின் தோற்றம், குணநலன்கள் பற்றி பத்து பாடல்களில் வரும் வருணனைகளை தொகுத்து எழுதுக. [25]

(ஆ) சிவன் அடியார்கள் எது எதற்கு அஞ்சமாட்டார்கள் என்று அப்பர் கூறுகிறார். அவர் கூறும் விசயங்களைக் கட்டுரையாகத் தரவும். [25]

© UCLES 2014

www.PapaCambridge.com

## பகுதி – 2

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் ((அ) அல்லது (ஆ)) விடை தருக.

**4** இக்காலக் கவிதைகள்

(அ) பாரதியார்
பாரதியார் இயற்கை வருணனை செய்வதில் வல்லவர் என்பதை மழை, புயற்காற்று ஆகிய இரண்டு கவிதைகளைக் கொண்டு விளக்கி எழுதுக. [25]

(ஆ) பாரதிதாசன்
வானம்பாடி, மயில் ஆகிய இரண்டு கவிதைகளை ஒப்பிட்டு உன் பார்வையில் எது சிறந்தது? ஏன்? என்று எழுதவும். [25]

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் ((அ) அல்லது (ஆ)) விடை தருக.

**5** நாடகம்

(அ) காதல் எங்கே நாடகத்தில் ஆசிரியரின் சிறந்த வசனநடையை எடுத்துக்காட்டுகளுடன் மதிப்பிடவும். [25]

(ஆ) இந்த நாடகத்தில் உங்களைக் கவர்ந்த கதாபாத்திரம் (கதாபாத்திரங்கள்) யார்? ஏன்? என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும். [25]

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் ((அ) அல்லது (ஆ)) விடை தருக.

**6** நவீன தமிழ்ச் சிறுகதைகள்

(அ) ஆசிரியர் ஜெயகாந்தனின் தனியான நடைக்கு யுகசந்தி கதை ஒரு எடுத்துக்காட்டு என்பதை ஏற்கிறீர்களா? உங்கள் கருத்தை விளக்கி ஒரு கட்டுரை வரைக. [25]

(ஆ) குருத்து கதை மூலம் இந்துமதி சொல்ல வரும் கருத்து என்ன? இதை எடுத்துக்காட்டுகள் காட்டி விளக்கவும். [25]

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2014